DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 200/2024

Prosecution Witness -P.W. 6

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. அருணாச்சலம் |
| Father's Name | : | ராஜூ |
| Village | : | பொன்மனை |
| Taluk | : | திருவட்டார் |
| Calling | : | கூலிவேலை |
| Age | : | 60 |
| Date | : | 09.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

09.09.2025

**முதல் விசாரணை:-**

நான் மங்கலத்தில் தாமசித்து வருகிறேன். நான் ரப்பர் பால் வெட்டும் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன முத்துபிள்ளை எனக்கு தெரியும். இருவருக்கும் மரம் வெட்டும் தொழில்தான். முத்துபிள்ளை இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. முத்துபிள்ளையின் பிரேத

பரிசோதனையின் போது என்னிம் கையெழுத்து வாங்கினார்கள். போலீஸ் என்னிடம் விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத கோரி, அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :-**

13.01.2024 அன்று போலீசார் விசாரித்தார்கள் என்றாலும் அப்போது 01.01.2024 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு எங்கள் ஊர் பொன்மணி மகன் முத்துபிள்ளை என்பவர் மங்கலம் புளிமூடு ஜங்சனில் உள்ள பஸ் நிறுத்தத்தில் பஸ்ஸுக்கு காத்திருக்கும் போது பொன்மனை அஞ்சல், மங்கலம், அரியம்பகோடு, உடையாம்பறம்புவிளை, கணேசன் மகன் அனிஷ் அங்கு வந்து முத்துபிள்ளையிடம் மது குடிப்பதற்கு பணம் கேட்டதாகவும், அதற்கு முத்துபிள்ளை நீ அடிக்கடி குடிக்க பணம் கேட்டு என்னிடம் தகராறு செய்து வருகிறாய் என்றும், உனக்கு குடிக்க பணம் தர என்னிடம் பணம் இல்லை என்றும், உனக்கு குடிக்க வேண்டும் என்றால் நீ வேலை செய்து குடி என்று சொன்னதாகவும், அனீஷ் முத்துப்பிள்ளையை பார்த்து தேவிடியா பிண்டாமோனே என திட்டி தனது கையில் வைத்திருந்த இரும்பு சாவியால் முத்துபிள்ளையின் வலது கண் புருவத்தில் குத்தி இரத்தகாயம் ஏற்படுத்தியும், அதே சாவியால் முத்துபிள்ளையின் வலது கால் தொடையிலும் பலமாக குத்தி இழுத்துவிட்டு, அனிஷ் தனது கையால் முத்துபிள்ளையின் தலை பிடித்து இழுத்து, பேருந்து நிறுத்தத்தில் உள்ள சுவரில் மாறி மாறி முட்ட வைத்து, முத்துபிள்ளைக்கு இடது பக்க தலையில் வீக்க காயமும், தலை முழுவதும்

ஊமைகாயங்கள் ஏற்படுத்திவிட்டு, அனிஷ் முத்துபிள்ளையை பார்த்து இதோடு செத்து போ என்று கூறிவிட்டு, அவரை கீழே தள்ளிவிட்டு தனது காலால் முத்துபிள்ளையை மிதித்தார் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்த நானும், முத்துபிள்ளையின் மகள் ஷைனியும், நடேசன் மகன் புஷ்பராஜ், தங்கநாடார் மகன் முருகனும், செல்வமணி மகன் ரமேஷ், தங்கப்பன் மகன் ரமேஷூம் ஓடி வரவே முத்துபிள்ளையை மிரட்டி விட்டு அனீஷ் தப்பி சென்றுவிட்டதாகவும், போலீசார் விசாரிக்கும்போது கூறிவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.